மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.04/2021
அசல் வழக்கு எண்.23/2017

கலாவதி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. அம்மு
2. அம்மாசி
3. லோகு
4. பூபதி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 23.03.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.கே.அர்ஜுனன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

1ம்எதிர்மனுதாரரான பி.வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்யும் போது வழக்கு சொத்தின் அளவுகளை ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் பல கேள்விகளுக்கு விடை தெரியவில்லை என சாட்சியமளித்துள்ளார். எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து குறித்து ஒப்புக் கொண்டுவிட்டு, தற்போது அதற்கு எதிர்மறையான பதில்களை அளித்துள்ளார். எனவே வழக்கு சொத்துகளை 17.4.1952, 15.6.1993 ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அளவையர் உதவியுடன் அளவுசெய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

2) 1ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2 முதல் 4 ம்எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

குறுக்குவிசாரணையின் போது பி.வா.சா.1 வழக்கு சொத்தின் அளவுகளை ஒப்புக் கொண்டதாகவும், பல கேள்விகளுக்கு தெரியவில்லை என பதிலளித்துள்ளதாக கூறுவது பொய்யாகும். அதேபோல் வழக்கு சொத்து குறித்து எதிர்வழக்குரையில் ஒப்புக் கொண்டுவிட்டு அதற்கு எதிர்மறையாக தற்போது சாட்சியமளிப்பதாக கூறுவது பொய்யாகும். 1ம்பிரதிவாதி 25.01.2006 ல் அவருடைய சொத்தை கிரயம் பெற்றுள்ளார். வாதியின் தாயார் வழக்கு சொத்தினை 22.04.1999 ல் கிரயம் பெற்றுள்ளார். அவர் 18.08.2011 ல் தான் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். எனவே 17.05.1952, 15.06.1963 ஆவணங்கள் எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தாது. வழக்கு சொத்தானது நத்தம் நிலமாகும். அனுபவத்தில் இருப்பவர்களுக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அ பதிவேடு, புலவரைபடம் ஆகியவை வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆக ஏற்கனவே வா.சா.ஆ.1ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை பி.வா.சா.1ன் மூலம் பி.வா.சா.ஆ.3 முதல் 5 வரையிலான சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்ய எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஆகவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கோரியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் 1ம்எதிர்மனுதாரரான பி.வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்யும் போது வழக்கு சொத்தின் அளவுகளை ஒப்புக் கொண்டுள்ளார் எனவும், ஆனால் பல கேள்விகளுக்கு விடை தெரியவில்லை என சாட்சியமளித்துள்ளார் எனவும், எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து குறித்து ஒப்புக் கொண்டுவிட்டு, தற்போது

அதற்கு எதிர்மறையான பதில்களை அளித்துள்ளார் எனவும், எனவே வழக்கு சொத்துகளை 17.4.1952, 15.6.1993 ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அளவையர் உதவியுடன் மனுசொத்துகளை அளவுசெய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணையின் போது பி.வா.சா.1 வழக்கு சொத்தின் அளவுகளை ஒப்புக் கொண்டதாகவும், பல கேள்விகளுக்கு தெரியவில்லை என பதிலளித்துள்ளதாக கூறுவது பொய் எனவும், அதேபோல் வழக்கு சொத்து குறித்து எதிர்வழக்குரையில் ஒப்புக் கொண்டுவிட்டு அதற்கு எதிர்மறையாக தற்போது சாட்சியமளிப்பதாக கூறுவது பொய் எனவும், 1ம்பிரதிவாதி 25.01.2006 ல் அவருடைய சொத்தை கிரயம் பெற்றுள்ளார் எனவும், வாதியின் தாயார் வழக்கு சொத்தினை 22.04.1999 ல் கிரயம் பெற்றுள்ளார் எனவும், அவர் 18.08.2011 ல் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் எனவும், வழக்கு சொத்தானது நத்தம் நிலம் எனவும், அனுபவத்தில் இருப்பவர்களுக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது எனவும், அ பதிவேடு, புலவரைபடம் ஆகியவை வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆக ஏற்கனவே வா.சா.ஆ.1ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவும், பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை பி.வா.சா.1ன் மூலம் பி.வா.சா.ஆ.3 முதல் 5 வரையிலான சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்ய எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை எனவும், எனவே 17.05.1952, 15.6.1963 ஆவணங்கள் எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தாது எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்குரையை கவனமாக பரிசீலனை செய்ததில் வழக்கு பி அட்டவணை சொத்து மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது எனவும், அதன் தொடர்ச்சியாக பி அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற வேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது தெரியவருகிறது.

(iv) மனுதாரர் தரப்பில் 17.04.1952 மற்றும் 15.06.1963 பத்திரங்களின் அடிப்படையில் வழக்கு சொத்தினை அளக்க வேண்டுமென கோரியுள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணம் எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என கட்சி செய்துள்ளது தெரியவருகிறது. மேற்படி ஆவணங்கள் எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்துமா, இல்லையா என்பது குறித்து அசல் வழக்கிற்கு பின்னிட்டு தான் தீர்மானிக்க முடியும் என்பதால் எதிர்மனுதாரர்களின் கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) இவ்வழக்கில் பி அட்டவணை சொத்து குறித்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளதால் நீதிமன்ற ஆணையாளர் அளிக்கும் அறிக்கையானது இவ்வழக்கை தீமானிக்க உதவும். மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு சொத்தை அளப்பதற்கு ஆட்சேபணை இல்லை என கூறியுள்ளதால் இம்மனு அனுமத்திக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) மனுதாரர் தரப்பில் 17.04.1952, 15.6.1963 ஆவணத்தின் அடிப்படையில் அளக்க வேண்டும் எனவும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வருவாய்துறை ஆவணங்கள் மூலம் அளக்க வேண்டும் என கோருவதால் மேற்படி இரண்டு ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் மூலம் வழக்கு சொத்தை அளக்க உத்தரவிடுவது நீதிக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக திரு.பி.கோபிநாத் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் வழக்கு சொத்துகளை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையருடன் பார்வையிட்டும், 17.04.1952, 15.06.1963 பாக பத்திரங்களின் அடிப்படையிலும், வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையிலும் அளந்தும், வழக்கு பி அட்டவணை சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா, இல்லையா என்பது குறித்தும், ஆக்கிரமிப்பு இருந்தால் அதன் அளவுகள் குறித்து அறிக்கையும், மற்றும் வழக்கு சொத்துகளின் இயற்பியல் தோற்றம் குறித்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.5000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக நீதிமன்ற ஆணையாளருக்கு

செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு மேற்படி சொத்துகளை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க 29.04.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.